சுருக்கம்

வேளாண்மை உழவர் நலத்துறை - 2022-2023-ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்-நெல்லுக்குப்பின் பயறு சாகுபடி திட்டத்தினை செயல்படுத்திட ரூ.17.00 கோடிக்கு நிர்வாக அனுமதி மற்றும் ரூ.11.37 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை - உழவர் நலத் (வே.உ.4) துறை**

**அரசாணை (நிலை) எண். 223** **நாள் : 14.09.2022**

சுபகிருது வருடம் ஆவணி 29,
திருவள்ளுவர் ஆண்டு, 2053

படிக்க:

1. 2022-2023 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மானியக் கோரிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள்.
2. வேளாண்மை இயக்குநரின் கடித எண். பஎவி.4/39121/2022, நாள்: 02.05.2022, 07.07.2022, 01.08.2022 மற்றும் 16.08.2022.

*****

ஆணை :

மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 2022-2023 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை மானியக் கோரிக்கையின் போது கீழ்வரும் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்:-

"வேளாண் விளை நிலங்களில் மண் வளத்தினை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு குறைந்த செலவில் கூடுதல் வருமானம் கிடைத்திடவும், சம்பா நெல் அறுவடைக்குப்பின், உளுந்து, பச்சைப்பயறு பத்து இலட்சம் ஏக்கரில் சாகுபடி செய்திட ஏக்கர் ஒன்றுக்கு 400 ரூபாய் வீதம் மானியம் வழங்குவதற்காக, 2022-2023 ஆம் ஆண்டில் 40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன்மூலம் தமிழகத்தின் பயறு உற்பத்தி இரண்டு இலட்சம் மெட்ரிக்டன் அளவுக்கு உயரும் என்பதுடன், 12 இலட்சம் விவசாயிகள் பயன் பெறுவர்".

2. மேலே, இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், வேளாண்மை இயக்குநர், நெல்லுக்குப்பின் பயறு சாகுபடி திட்டத்தின் நோக்கம், திட்டத்தினை செயல்படுத்துவதற்கான உத்திகள், திட்டத்தின் விவரம், திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்கள், பயனாளிகள், திட்டம் செயல்படுத்தப்படும் முறை, மானிய விகிதம், திட்டமதிப்பீடு, நிதி ஆதாரம், திட்டத்தின் பலன்கள் மற்றும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு தேவையான விதைக்

கொள்முதல் (Seed Plan for Pulses Cultivation after Paddy in 10 Lakh acres) திட்டம் குறித்து விவரித்துள்ளார்.

3. வேளாண்மை இயக்குநர் 2022-2023-இல் நெல்லுக்குப்பின் பயறு சாகுபடி திட்டத்தினை ரூ.40 கோடி மதிப்பில் செயல்படுத்திட, கீழ்வரும் திட்டங்களில் இருந்து நிதியினை பயன்படுத்த உரிய ஆணையினை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

(i) மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், அறிவிக்கப்பட்ட நெல்லுக்குப் பின் பயறு சாகுபடி திட்டக் கூறுக்கென ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஒதுக்கீடான ரூ. 5.00 கோடி.

(ii) மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தென்னை வளர்ச்சி மேம்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.9.00 கோடி நிதியிலிருந்து ரூ. 3.00 கோடி.

(iii) மாநில வளர்ச்சித் திட்டத்தின் கீழ், முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் இருந்து ரூ. 3.37 கோடி.

(iv) விதை கிராம திட்டம் – விதைகள் மற்றும் நடவுப்பொருட்களுக்கான துணை இயக்கத்தின் கீழ் (SMSP), ரூ.45.136 கோடிக்கு அனுப்பப்பட்ட கருத்துருக்கான ஒன்றிய அரசின் நிதி ஒப்பளிப்பு எதிர்நோக்கி ஒருங்கிணைப்பு நிதியாக ரூ.5.00 கோடி.

(v) தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் - நெல் தரிசில் பயறு சாகுபடி (Targeting Rice Fallow Area – Pulses) திட்டத்தின் கீழ், ஒன்றிய அரசின் ரூ.2.574 கோடிக்கான திட்டத்தில், விதை விநியோகத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியில் ஒருங்கிணைப்பு நிதியாக ரூ.0.63 கோடி.

(vi) மீதமுள்ள ரூ.23 கோடிக்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்திலிருந்து வழங்க அனுமதி (நிதி விடுப்புக்குப் பின்)

**திட்டத்திற்கான மொத்த நிதி மற்றும் நிதி ஆதாரம்**

(ரூ. கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த நிதி | தேவைப்படும் மொத்த நிதி | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | | மறு ஒதுக்கீடு | ஒருங்கிணைப்பு நிதி | |
| 1 | மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம் | | | | |
| அ) | நெல்லுக்குப்பின் பயறு சாகுபடி | 5.00 | 5.00 | - | 5.00 |
| ஆ) | தென்னை வளர்ச்சி மேம்பாடு | 9.00 | 3.00 | - | 3.00 |
| 2 | முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் | 100.00 | 3.37 | - | 3.37 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த நிதி | தேவைப்படும் மொத்த நிதி | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | | மறு ஒதுக்கீடு | ஒருங்கிணைப்பு நிதி | |
| 3 | விதை கிராமத் திட்டம் - விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம் (SMSP) (கருத்துரு ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது) | 45.136 | - | 5.00 | 5.00 |
| 4 | **நெல் தரிசில் பயறு சாகுபடி** (Targeting Rice Fallow Area – Pulses) | 2.574 | - | 0.63 | 0.63 |
| 5 | **தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நெல்லுக்குப் பின் பயறு சாகுபடி திட்டம்** (கருத்துரு ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது) | 23.00 | - | - | 23.00 |
| | மொத்தம் | | | | 40.00 |

4. மேலும், 2022-2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட பயறு விதை உற்பத்தித் திட்டத்தினை, நிர்ணயிக்கப்பட்ட இலக்கின்படி செயல்படுத்தி, தரமான விதையை கொள்முதல் செய்து விநியோகம் செய்திட ரூ.11.37 கோடி (மாநில வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நெல்லுக்கு பின் பயறு சாகுபடி ரூ.5.00 கோடி + தென்னை வளர்ச்சி மேம்பாடு ரூ.3.00 கோடி + முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்க திட்டத்தின் கீழ் ரூ 3.37 கோடி, ஆக மொத்தம் ரூ.11.37 கோடி) மானியத்தொகையானது, விவசாயிகளுக்கு விதை விநியோகம் செய்யப்பட்ட பின், முன்பணமாக தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமைக்கு (டான்சிடா) வரவு கணக்கில் செலுத்தப்பட்டு மீள சுழற்சியாக செலவிடப்படும் என்பதால், இத்தொகையை வழங்கும் பட்சத்தில், பயறு விதை கொள்முதலுக்கு பயன்படுத்தப்பட்டு, விதைப்பண்ணை விவசாயிகளுக்கு காலத்தே தொகை விடுவிக்கப்பட்டு, திட்டமிடப்பட்ட இலக்கை அடைய முடியும் எனவும் தெரிவித்து, அதற்குரிய ரூ.11.37 கோடி நிதியை பெற்று, தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமைக்கு வழங்கிட, உரிய அனுமதியினை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்காணும், வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, 2022-2023 ஆம் ஆண்டில் நெல்லுக்குப்பின் பயறு சாகுபடி திட்டத்தினை செயல்படுத்திட, ரூ.17.00 கோடிக்கு கீழ்க்கண்டவாறு நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ரூ. கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த நிதி | மறு ஒதுக்கீடு | ஒருங்கிணைப்பு நிதி | நெல்லுக்குப்பின் பயறு சாகுபடி திட்டத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்படும் நிதி |
|---|---|---|---|---|---|
| 1 | மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம் | | | | |
| அ) | நெல்லுக்குப்பின் பயறு சாகுபடி | 5.00 | 5.00 | - | 5.00 |
| ஆ) | தென்னை வளர்ச்சி மேம்பாடு | 9.00 | 3.00 | - | 3.00 |
| 2 | முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் | 100.00 | 3.37 | - | 3.37 |
| 3 | விதை கிராமத் திட்டம் - விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக் கான துணை இயக்கம் (SMSP) (ஒன்றிய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி) | 45.136 | - | 5.00 | 5.00 |
| 4 | நெல் தரிசில் பயறு சாகுபடி (Targeting Rice Fallow Area – Pulses) | 2.574 | - | 0.63 | 0.63 |
| | மொத்தம் | | | | 17.00 |

6. மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து ரூ.8.00 கோடியும் (நெல்லுக்குப்பின் பயறு சாகுபடி ரூ.5.00 கோடி மற்றும் தென்னை வளர்ச்சி மேம்பாடு ரூ.3.00 கோடி) மற்றும் முதலமைச்சரின் மானாவாரி நிலமேம்பாட்டு இயக்க திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் ரூ.3.37 கோடியும், ஆக மொத்தம் ரூ.11.37 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும் இத்திட்டத்திற்காக தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 2022-2023 ஆம் நிதியாண்டில் முதல் தவணையாக ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையிலிருந்து ரூ.0.63 கோடியினை நெல்தரிசில் பயறு சாகுபடி திட்டத்தினை செயல்படுத்துவதற்காக பயன்படுத்திக்கொள்ள அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி-5-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

1. மாநில வளர்ச்சித் திட்டம்

2401 - 00 – பயிர் வளர்ப்பு – 104 - வேளாண்மைப் பண்ணைகள் – மாநில செலவினங்கள் - AK- மாநில வேளாண்மை வளர்ச்சித் திட்டம் - 311மானியங்கள் – 01தனித் திட்ட மானியம் - ரூ. 8 கோடி

2. முதலமைச்சரின் மானாவாரி நிலமேம்பாட்டு இயக்கம்

2401 - 00 – பயிர் வளர்ப்பு – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – KL நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம் - 311 மானியங்கள் - 01 தனித் திட்ட மானியம் - ரூ.3.37 கோடி

8. மேலே பத்தி 6-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமைக்கு பெற்று வழங்கிட வேளாண்மை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

9. இத்திட்டத்திற்காக கொள்முதல் செய்யப்படும் விதைகள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பண்ணைகள்/ஆராய்ச்சி நிறுவனங்கள், மாநில அரசின் வேளாண்மை/தோட்டக்கலை/விதைப் பண்ணைகளிலிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்றும் வெளி நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யக் கூடாது என்றும் வேளாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

10. இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறையினை தவறாமல் கடைபிடிக்குமாறு வேளாண்மை இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

11. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.467/கூடுதல் செயலாளர் (ஜி.கே.டி./நிதி(வேளாண்மை)/2022, நாள் 12.09.2022-இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்:
வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
மாநில பொதுக் கணக்காயர் (A&E), சென்னை – 18.

மாநில பொதுக் கணக்காயர் (Audit-1), சென்னை – 18.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
மாநில பொதுக் கணக்காயர் (G&SSA), சென்னை – 35.
மாநில முதன்மைக் கணக்காயர் (E&RSA), சென்னை – 18.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை-18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர், சென்னை-18/(பெயரில்).
உறைவிட தணிக்கை அலுவலர், மாநில முதன்மை கணக்காயர் அலுவலகம் (சமூகத் தணிக்கைப் பிரிவு), சென்னை-9.

**நகல்:**

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை-9.
நிதி (வேளாண்மை / வரவு செலவு பொது I (ம) II ) துறை, சென்னை-9.
வேளாண்மை – உழவர் நலத் (பொது/வ&தி) துறை, சென்னை-9.
வேளாண்மை – உழவர் நலத் (அநமு3) துறை, சென்னை-9. (2 நகல்கள்) (அட்டவணைப்படுத்தும் வகைக்கு).
உதவி நிரலர், வேளாண்மை - உழவர் நலத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

## இணைப்பு-I

அரசாணை (நிலை) எண். 223, வேளாண்மை - உழவர் நலத் (வே.உ.4) துறை

நாள்: 12.09.2022

## நெல்லுக்குப்பின் பயறு சாகுபடி திட்டம் - 2022-23

## வரைவு வழிகாட்டு நெறிமுறைகள்

திட்டம் செயல்படுத்துவதற்கான கால அளவு:

| நாள் | நிகழ்ச்சி |
|---|---|
| அக்டோபர் 2022 - 4வது வாரம் | மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்துதல் |
| நவம்பர் 2022 - 1வது வாரம் | விவசாயிகள் தேர்வு |
| டிசம்பர் 2022 - 1வது வாரம் | வேளாண்மை விரிவாக்க மையங்களில் விதை இருப்பை உறுதி செய்தல் |
| விழிப்புணர்வு வாரம் | |
| டிசம்பர் 2வது வாரம் | மாவட்ட/ வட்டார அளவில் கருத்தரங்கம் நடத்துதல் |
| டிசம்பர் 3வது வாரம் | குறுவட்டார அளவில் கருத்தரங்கம் நடத்துதல் |
| டிசம்பர் 4வது வாரம் முதல் 2023 ஜனவரி 1வது வாரம் வரை | கிராம அளவில் விதை விற்பனை மற்றும் விழிப்புணர்வு முகாம் நடத்துதல் |
| ஜனவரி 2வது வாரம் | பயறுசாகுபடி திட்டத்தினை செயல் படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல் |
| ஜனவரி – மார்ச் 2023 | பயிரிடப்பட்ட பரப்பினை ஒத்திசைவு செய்தல் |

விழிப்புணர்வு பிரச்சாரங்கள் : மாவட்ட, வட்டார, குறுவட்டார மற்றும் கிராம அளவில் நடத்துதல்

1. கிராம அளவில் விழிப்புணர்வு கூட்டங்கள்:

அனைத்து சகோதரத் துறைகளுடன் இணைந்து, கிராம அளவில் சம்பா நெல் பயிரிடும் விவசாயிகளிடையே சம்பா நெல்லினை தொடர்ந்து, பயறுவகைப் பயிர்களை சாகுபடி செய்ய விழிப்புணர்வு பிரச்சார கூட்டம் நடத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். கிராம அளவில் கூட்டங்கள் நடத்தும் போது, வேளாண்மை விரிவாக்க மையத்திலிருந்து பயறுவகை விதைகளை, கிராமத்திற்கு நகர்வு செய்து விநியோகம் செய்திடல் வேண்டும். மேலும் விதைகள் தேவைப்படும் பட்சத்தில், உரிய அனுமதி அளித்து தனியார் விதை நிறுவனங்கள் மூலம் விதைகளை கிராமத்தில் விநியோகம் செய்திட ஏற்பாடு செய்திட வேண்டும்.

2. குறுவட்ட அளவில் விழிப்புணர்வு கூட்டங்கள் :

வேளாண்மை அலுவலர் தலைமையில், வேளாண் அறிவியல் மையம் (KVK) மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் இருந்து வேளாண் விஞ்ஞானிகள், உதவி பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம் மற்றும் விற்பனை), ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் அலுவலர் மற்றும் அட்மா திட்ட விவசாய நண்பர் ஆகியோர்களை கொண்ட குழுவானது குறுவட்ட அளவில் விவசாயிகளுக்கு கருத்தரங்கம் மற்றும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்திட வேண்டும்.

3. வட்டார அளவில் விழிப்புணர்வு கூட்டங்கள் :

வேளாண்மை உதவி இயக்குநர் தலைமையில், வேளாண் அறிவியல் மையம் (KVK) மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் இருந்து வேளாண் விஞ்ஞானிகள், உதவி செயற் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) , வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம் மற்றும் விற்பனை), ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் அலுவலர், விதைச்சான்று துறை அலுவலர்கள் மற்றும் அட்மா திட்ட விவசாய நண்பர் ஆகியோர்களை கொண்ட குழுவானது வட்டார அளவில் விவசாயிகளுக்கு கருத்தரங்கு கூட்டங்கள் நடத்திட நெல் தரிசில் பயறுவகை சாகுபடிப் பரப்பினை அதிகரித்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. மாவட்ட அளவில் விழிப்புணர்வு கூட்டங்கள் :

மாவட்ட ஆட்சியர் தலைமையில், வேளாண்மை இணை இயக்குநர், மற்ற துறை அலுவலர்கள் முறையே செயற்பொறியாளர் (வே.பொ), துணை இயக்குநர் (விதை ஆய்வு) / உதவி இயக்குநர் (விதைச் சான்று) / வேளாண் துணை இயக்குநர் (வேளாண் வணிகம் மற்றும் வேளாண் விற்பனை), ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் அலுவலர், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், உள்ளூர் வணிகர்கள், வேளாண் அறிவியல் மையம் (KVK) / தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆகியோர்களை கொண்ட குழுவானது மாவட்ட அளவில் நெல்லுக்குப்பின் பயறு சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு ஒருங்கிணைப்பு கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். மாவட்ட அளவில் அக்டோபர் நான்காவது வாரத்தில் இந்த ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்திட வேண்டும்.

விளம்பரம் :

துண்டுப்பிரசுரங்கள், விளம்பரப் பலகைகள், சுவர் விளம்பரங்கள், உள்ளூர் தொலைக்காட்சி மற்றும் குறும்படங்கள் மூலம் நெல்லுக்குப் பின் பயறுவகைப் பயிர்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க வேண்டும்.

<u>விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்துவதில் சகோதரத் துறைகளின் பங்கு</u>

1. <u>வேளாண்மைத் துறை :</u>

மாவட்ட அளவில் திட்ட மேலாண்மைக் குழு (PMT-ஆலோசகர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்) மற்றும் வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) ஆகியோர்களை கொண்ட குழு மாவட்ட / வட்டார / குறுவட்டார / கிராம அளவில் பயறு சாகுபடியின் முக்கியத்துவத்தைப் பற்றி கருத்தரங்கு மற்றும் விழிப்புணர்வு கூட்டங்களை நடத்தி, சாகுபடி பரப்பு சரியானபடி ஒத்திசைவு செய்வதை உறுதி செய்திடல் வேண்டும். திட்ட மேலாண்மைக்குழு இல்லாத மாவட்டங்களில் வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) மற்றும் வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) இப்பணிகளை மேற்கொள்வார்.

<u>கிராமத்தை தேர்வு செய்தல் :</u>

உதவி வேளாண்மை அலுவலர் சம்பா, பிசானம்/தாளடி நெல் சாகுபடி செய்யும் கிராமங்களை தேர்வு செய்து விவசாயிகளின் பட்டியலை தயார் செய்திடல் வேண்டும்.

<u>கிராம அளவில் விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துவதற்கான செயல்திட்டம் :</u>

வேளாண்மை உதவி இயக்குநர், வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர், உதவிப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம் மற்றும் விற்பனை), ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் அலுவலர், விதைச் சான்றுத் துறை அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் கொண்ட குழுவானது வேளாண் அறிவியல் மையம் (KVK) / ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானிகள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் முன்னிலையில் நெல் அறுவடைக்கு முன்னர் (டிசம்பர் மாதம்) கருத்தரங்கம் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும்.

உதவி வேளாண் அலுவலர், கிராம அளவிலான செயல்திட்டத்தினை கீழ்க்கண்ட முறையில் தயாரித்து தினசரி விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்த வேண்டும்.

- கிராம அளவில் விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துவதற்கான நாள், இடம், விதை விநியோகத்திற்கான ஆதாரம், உற்பத்தி இடுபொருட்களுக்கான ஏற்பாடுகள் குறித்த திட்டத்தினை வகுத்திட வேண்டும்.
- நீர்ப் பற்றாக்குறை இருந்தால், நுண்ணீர்ப் பாசன வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். (SMAM மூலம்)

- முக்கிய தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய செயல்விளக்கத் திடல்கள் மற்றும் வயல் விழா ஆகியன தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் (NFSM- PULSES) மற்றும் நெல் தரிசில் பயறு சாகுபடி (Targeting Rice Fallow Area) ஆகிய திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும்.
- இத்திட்டத்தின் மூலம் பயிரிடப்படும் பரப்பு, அடங்கல் பதிவேட்டில் எவ்வித குறைபாடுமின்றி, பதிவேற்றம் செய்து ஒத்திசைவு செய்யப்பட வேண்டும்.
- உயர் விளைச்சல் இரகங்கள், உயர் தொழில்நுட்பங்கள், இயந்திரமயமாக்குதல், நுண்ணீர் பாசனம் (மழைத் தூவான், வயலுக்கு நீர் கொண்டு செல்லும் குழாய்கள்.... etc) ஆகியவற்றை சிறு கண்காட்சிகள் மூலம் எடுத்துரைத்தல்.

<u>2. வேளாண்மை பொறியியல் துறை :</u>

- நிலத்தை தயார் செய்வதற்கு தேவையான இயந்திரங்களை வாடகை இயந்திரம் மையங்கள் மூலம் ஏற்படுத்தி தருதல்.
- இலைவழி ஊட்டச் சத்து தெளிப்பு மற்றும் அறுவடை இயந்திரங்களை ஏற்பாடு செய்து தருதல்.

<u>3. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்/ வேளாண் அறிவியல் மையம் :</u>

- ஆளில்லா விமானம் மூலம் இலைவழி ஊட்டத் தெளிப்பை செயல்படுத்திக் காட்டுதல்.
- பூச்சி நோய்த்தாக்குதல் தெரிந்தால், முன் கூட்டியே பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்.

<u>4. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை :</u>

- விலை ஆதரவுத் திட்டம் மூலம் உற்பத்தி செய்யும் பயறுவகைப் பயிர்களை குறைந்தபட்ச ஆதரவு விலையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக கொள்முதல் செய்தல் அல்லது உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அல்லது உள்ளூர் வணிகர்கள் / உள்ளூர் சந்தை ஆகியவற்றின் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்தல்.
- விவசாயிகளிடமிருந்து மொத்தமாக கொள்முதல் செய்து உடனடியாக உரிய தொகை கிடைத்திட வழிவகை செய்தல்.
- உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம், பயறுவகைப் பயிர்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்தல்.

<u>5. பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையின் பங்கு :</u>

- இத்திட்டத்தின் மூலம் பயிரிடப்படும் பரப்பு அடங்கல் பதிவேட்டில் எவ்விதக் குறைபாடுமின்றி, பதிவேற்றம் செய்து ஒத்திசைவு செய்யப்பட வேண்டும்.

## நெல்லுக்குப்பின் பயறு சாகுபடி திட்டத்திற்கான பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள் :

i. பயனாளிகளை தேர்ந்தெடுப்பது திட்ட இலக்கின் அடிப்படையில் இருக்க வேண்டும் மற்றும் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள் திட்டத்தின் பலனை விவசாயிகள் பெறுவதற்கு AGRISNET / உழவன் செயலியை (UZHAVAN APP) திறம்பட பயன்படுத்தி பதிவு செய்ய வேண்டும்.

ii. விண்ணப்பித்த விவசாயிகளின் அடிப்படை விவரங்கள் ஆதார் எண் மற்றும் கைபேசி எண் உட்பட அனைத்து விபரங்களையும் AGRISNET இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

iii. முன்னுரிமை பதிவேடு வட்டார அளவில் பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் முன்னுரிமை அடிப்படையில்தான் திட்டப்பலன்கள் வழங்கப்பட வேண்டும்.

iv. ஆதிதிராவிடர் / பழங்குடியினர், சிறு / குறு விவசாயிகள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

v. **மானிய விபரம் (எக்டர் ஒன்றிற்கு)**

| இடுபொருள் | அலகு / எக்டர் ஒன்றிற்கு | தொகை (ரூ.) | 50 % மானிய விலை (ரூ.) | இடுபொருள் ஆதாரம் |
|---|---|---|---|---|
| விதை கிலோவிற்கு ரூ.100 (உளுந்து மற்றும் பச்சைப்பயறு) | 20 கிலோ | 2000 | 1000 | துறை விநியோகம் |

vi. வேளாண்மை இணை இயக்குநர்கள் மற்றும் வேளாண் உதவி இயக்குநர்கள் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் போதுமான அளவு சான்று விதை இருப்பில் உள்ளதை உறுதி செய்து, உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும்.

vii. கிராம சபைக் கூட்டங்களில் இத்திட்டத்தின் செயல்பாடுகள் மூலம் அதன் பயன்களை பற்றி விவசாயிகளுக்கு விளக்கம் வேண்டும்.

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

//உண்மை நகல்//

14/9/2022
பிரிவு அலுவலர்
14/9/2022